**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 237/2019**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய அம்சவள்ளி **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 11.08.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : **அம்சவள்ளி** | | |
| Father /Husband Name | : **குருசாமி** | Court | : |
| Village | : **மேலசிங்கானோடை** | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 56/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் 2 ம் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | 12.10.1904 | தாவா சொத்தை பொறுத்து 1,2 பிரதிவாதிகளின் பாட்டனார் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 01.04.1992 | 1ம் வாதி குருசாமிக்கு 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் ராமசாமி எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்தத்தின் அசல் **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | -- | தாவா சொத்திற்கு 1ம் வாதி செலுத்திய கிஸ்து ரசீதுகளின் அசல் (எண்ணிக்கை – 2) **வாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 4. | 11.08.2018 | 1ம் வாதி 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அசல் **வாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | -- | மேற்படி அறிவிப்பை 3 முதல் 5 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டையின் அசல் ( எண்ணிக்கை –3) **வாசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6. | 08.09.2018 | தாவா சொத்திற்கான கணினி சிட்டா **வாசாஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.